**பாளையங்கோட்டை மத்திய சிறைக் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை– திரு.சி.கிருஷ்ணகுமார்.பி.இ.,**

எண். 10643 / பொ.1 /2017 நாள்: 10.01.2019.

பாருள்: சிறைகள் - மத்திய சிறை பாளையங்கோட்டை - தமிழ்நாடு அமைச்சுப்பணிகள், தமிழ்நாடு அரசுப்பணியாளர் மூலம் தேர்வு செய்யப்பட்ட திருமதி.M.பாலமுனியம்மாள், இளநிலை உதவியாளர் என்பவர் பாளையங்கோட்டை மத்தியசிறையில் 23.10.2017 முற்பகல் நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவத்தில் வைத்தல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை:
1) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடித எண்.5340 / PSD - G1 / 2017, நாள்: 03.10.2017.
2) கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணை எண். 18356 / ES.1 / 2013 - 1, நாள்: 16.10.2017.
3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.10643/பொ.1/2017, நாள்: 23.10.2017.

***

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்ட திருமதி.M.பாலமுனியம்மாள் என்பவர் பார்வை 2ல் காணும் கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணையின் படி பாளையங்கோட்டை மத்தியசிறையில் 23.10.2017 முற்பகல் இ.நி.உ. பணியில் சேர்ந்தார்.

2. பார்வை 2ல் காணும் கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணையில் தெரிவித்துள்ளவாறு மேற்கண்ட இளநிலை உதவியாளர் திருமதி.M.பாலமுனியம்மாள் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் சென்னை உயர்நீதிமன்ற / மதுரை கிளை, சென்னை உயர்நீதி மன்றத்தில் 2015 - 2016-ம் வரையிலான காலத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் Group-IV-க்கான வழக்குகளில் முடிவுகளுக்கு உட்பட்டு 23.10.2017 முற்பகல் முதல் பணிவரன்முறைப் படுத்தி ஆணையிடப்படுகிறது.

3. மேலும் இப்பணியாளர் 23.10.2017 முற்பகல் முதல் தொடர்ந்து மூன்றாண்டு காலத் தொடர்பணியில் இரண்டாண்டு காலம் தகுதிகாண்பருவத்தில் வைக்கப்படுகிறார். இத்தகுதிகாண்பருவ காலத்தில், அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும் இதன் பின்னரே இவரது தகுதிகாண்பருவம் நிறைவு செய்ததாக ஆணை பிறப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

4. இச்செயல்முறை ஆணையினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சிறைக்கண்காணிப்பாளர்,
மத்தியசிறை, பாளையங்கோட்டை.

11.1.19

பெறுநர் -
திருமதி.M.பாலமுனியம்மாள், இளநிலை உதவியாளர், மத்தியசிறை, பாளையங்கோட்டை.

நகல் -
கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர், சென்னை - 08.
மேலான தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் - அலுவலக மேலாளர் / அலுவலக கண்காணிப்பாளர் / பொ.1 பணிப்பதிவேடு / இருப்பு கோப்பு.